# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 13768/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www. tneo.gov.in


**முன்னிலை : திரு.ஆ.தர்மராஜ் – மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 239/2011**

திரு. க. கணேசன்
த/பெ. திரு.கந்தசாமி
பாப்பங்காடு
வைகுந்தம் (அஞ்சல்)
சங்ககிரி வட்டம்
சேலம் மாவட்டம் – 637 103.

... மேல்முறைமுறையீட்டாளர்
(திரு. க. கணேசன்)

எதிர்

செயற்பொறியாளர் / இ (ம) ப
மேட்டூர் மின்பகிர்மான வட்டம்
வி.என். பாளையம்
சங்ககிரி – 637 307.

... எதிர்மனுதாரர்
(திரு.எம். கணேசன் உதவி செயற்பொறியாளர்/கிழக்கு சங்ககிரி)

**கேட்புரை நாள் : 14–02–2012 மற்றும் 8.5.2012**
**ஆணை நாள் : 18–07–2012**

மேற்கூறிய மேல்முறையீட்டாளரின் 21–07–2011 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 239/2011 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கூறிய மேல்முறையீட்டு மனுவின் மீது மின்குறை தீர்ப்பாளரின் கேட்புரை (hearing) 14-02-2012 மற்றும் 8.5.2012 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. மேற்கூறிய மனு, பதிலுரை பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் கேட்புரை நாளில் எதிர்மனுதாரரின் சார்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களையும் ஆராய்ந்து, மின்குறை தீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

(1) **மேல்முறையீட்டாளரின் வேண்டுகோள்:**

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம் ஒலக்கசின்னானூர் கிராமம் சர்வே எண். 178/3F நிலத்திலுள்ள கிணற்றிற்கு மின்இணைப்பு வேண்டி திரு.க.கணேசன் அவர்களின் தந்தை திரு.கந்தசாமி அவர்களால் பதிவு செய்யப்பட்ட மனு எண்.151/90–91/15–09–1990 என்ற விவசாய மின்இணைப்பு விண்ணபத்தை திரு.க.கணேசன் அவர்கள் தனக்கு சொந்தமான வைகுந்தம் கிராமத்தில் உள்ள சர்வே எண்.369/1B என்ற நிலத்திலுள்ள ஆழ்துளைக் கிணற்றிற்கு இடமாற்றம் செய்ய வேண்டி மேல்முறையீடு செய்துள்ளார்.

(2) **வழக்கின் சுருக்கம்** :–

மேல்முறையீட்டு மனுதாராகிய திரு.க.கணேசன் அவர்களின் தந்தை திரு.க.கந்தசாமி கவுண்டர் அவர்கள், ஒலக்கசின்னானூர் கிராமம் சர்வே எண்.178/3F என்ற நிலத்தில் அமைந்துள்ள கிணற்றிற்கு மின்இணைப்பு வேண்டி விண்ணபத்தை 15–09–1990 அன்று பதிவு செய்துள்ளார். அதன் பதிவு எண்.151/90–91 ஆகும்.

திரு.க. கணேசன் அவர்கள், அந்த விவசாய மின்இணைப்புக்கான விண்ணபத்தை பெயர் மாற்றம் செய்து தனக்கு சொந்தமான வைகுந்தம் கிராமத்தில் உள்ள சர்வே எண்.369/1B என்ற நிலத்தில் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்றிற்கு மின்இணைப்பு தரும்படி கேட்டுள்ளார். திரு.கந்தசாமி கவுண்டர் அவர்கள் மின்இணைப்பு கேட்டு விண்ணப்பித்திருந்த கிணற்றில் ஏற்கனவே, திரு.கந்தசாமி கவுண்டர் அவர்கள் பெயரில் மின்இணைப்பு உள்ளதால் அந்த விண்ணபத்தை வேறு கிணற்றிற்கு மாற்ற முடியாது என்று உதவி பொறியாளர் / வைகுந்தம் அவர்கள் கூறியதால், மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம், மேட்டூர் மின்பகிர்மான வட்டத்திற்கு மனு செய்துள்ளார். மேற்படி மனுவை பரிசீலித்த மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம், மேட்டூர் மின்பகிர்மான வட்டம் அந்த

விவசாய விண்ணப்பத்தை வேறு கிணற்றிற்கு மாற்ற முடியாது என்று கூறியுள்ளதால் மேல்முறையீட்டாளர், மின்குறை தீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்துள்ளார்.

(3) <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:–

மேல்முறையீட்டாளர், தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.

(அ) சங்ககிரி வட்டம், ஒலக்கசின்னானூர் கிராமத்தில் அவருடைய தந்தைக்கும், திரு.ராசிக் கவுண்டர் (லேட்) அவர்களின் மனைவி திருமதி.ராசாயம்மாளுக்கும் கூட்டாக சர்வே எண். 178/3F என்ற நிலம் உள்ளது என்றும், அந்த நிலத்தில் உள்ள கிணற்றிற்கு, அவரது தந்தையும், திருமதி.ராசாயம்மாளும் கூட்டாக விவசாய மின்இணைப்பு 25 ஆண்டுகளுக்கு முன்பு பெற்று பயன்படுத்தி வந்ததாக கூறியுள்ளார்.

(ஆ) திருமதி.ராசாயம்மாள் அவர்கள் பராமரிப்பிற்காக எந்த செலவு தொகையையும் தருவது இல்லை என்பதால், மனுதாரரின் தந்தை அதே கிணற்றிற்கு தனியாக ஒரு மின்இணைப்பு பெற வேண்டி 15–09–1990ல் மனு செய்ததாகவும், அந்த மனு 151/90–91 என்று மின்வாரியத்தில் பதிவு செய்யப்பட்டதாகவும் கூறியுள்ளார். அதற்கு சாதராண வரிசைப்படி மின்இணைப்பு பெற்று கொள்ள தகவல் 24–01–2009ல் கிடைத்ததாகவும் கூறியுள்ளார்.

(இ) மனுதாரரின் தந்தை 1997ல் இறந்து விட்டதாலும், மனுதாரர் மட்டுமே வாரிசு என்பதாலும் மனு செய்யப்பட்ட கிணற்றில் கூட்டாக மின்இணைப்பு உள்ளதாலும் அவரின் தந்தையின் மின்இணைப்பு விண்ணப்பத்தை மனுதாரரின் பெயரில் உள்ள அவரின் வேறு நிலத்தில் ஆழ்துளை கிணறு அமைத்தால் மாற்றி கொடுக்க முடியுமா என்று வைகுந்தம் மின்சார அலுவலகத்தில் விசாரித்து அது முடியும் என்று கூறியதால் அதற்கான

ஏற்பாடுகளை அதாவது பைப், மோட்டார் மற்றும் உபகரணங்களை வாங்கி ஏற்பாடு செய்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

(ஈ) சங்ககிரி வட்டம், வைகுந்தம் கிராமத்தில் உள்ள 369/ 1B என்ற சர்வே நம்பரில் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்றிற்கு மின்இணைப்பு பெற தேவையான அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

(உ) வைகுந்தம் மின்சார அலுவலக, உதவி பொறியாளர் அவர்கள் ஒருவருடைய பெயரில் ஒரே கிணற்றிற்கு இருமின் இணைப்புகள் வழங்க முடியாது என்பதால் அந்த விண்ணப்பத்தை வேறு கிணற்றிற்கு மாற்ற முடியாது என்று கூறிவிட்டதாக தெரிவித்துள்ளார்.

(ஊ) ஒலக்க சின்னானுார் கிராமத்தில் உள்ள மின்இணைப்பு, அவரின் தந்தையும், திருமதி.ராசாயம்மாளும், கூட்டாக பதிவு செய்து கூட்டாக பதிவேட்டில் கையொப்பமிட்டு பெற்ற மின்இணைப்பு, எனவே தனது தந்தைக்கு மட்டும் உரிமை உள்ளது அல்ல என்பதால் புதிய மின்இணைப்பு கேட்டு விண்ணப்பித்த மனுவை பெயர் மாற்றம் செய்து, வேறு சர்வே நம்பரில் உள்ள கிணற்றிற்கு வழங்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரை</u> :–

செயற்பொறியாளர் (இயக்கமும் பாராமரிப்பும்), சங்ககிரி கோட்டம், மேட்டூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்:–

(அ) மனுதாரர் கூட்டாக சர்வே எண்.178/3F ஒலக்க சின்னானுாரில் உள்ள கிணற்றிற்கு மின்இணைப்பு வேண்டி விண்ணபித்தார் எனக் கூறுவது தவறான தகவலாகும். மனுதாரருடைய தந்தை திரு.கந்தசாமிகவுண்டர் மேற்படி சர்வே எண்ணில் உள்ள கிணற்றிற்கு கடந்த 15–09–1990ல் மின்இணைப்பு வேண்டி பதிவு எண்.151/90–91 வழியாக

தனியாக விண்ணப்பித்துள்ளார். அதற்கு ஆதாரமாக மேற்படி விண்ணப்பத்தின் நகல் இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது.

(ஆ) மனுதாரரின் தந்தை மேற்படி மின்இணைப்பு வேண்டி விண்ணப்பித்த சர்வே எண்.178/3Fல் உள்ள அதே கிணற்றிற்கு கடந்த 26–03–1987ல் மின்இணைப்பு எண்.166–003–68யை சாதாரண வரிசையில் பெற்று விவசாயம் செய்து வந்துள்ளார். தற்சமயம் மேற்படி கிணற்றில் உள்ள மின்இணைப்பு மனுதாரரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதற்கு ஆதாரமாக சோதனை அறிக்கை எண். 008113–ன் நகல் தாக்கல் செய்யப்படுகிறது.

(இ) தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய வழிகாட்டுதலில் தமிழ்நாடு மின்பகிர்மான தொகுப்பு விதி 27 (13) மற்றும் 29 (2)–ன் படி ஒரு கிணற்றிற்கு ஒரு நபர் பெயரில் ஒரு மின்இணைப்பு மட்டுமே வழங்க இயலும் என உள்ளது. எனவே, மனுதாரரின் தந்தை ஏற்கனவே சர்வே எண்.178/3Fல் உள்ள கிணற்றிற்கு மின்இணைப்பு பெற்று அதை மனுதாரர் பயன்படுத்தி வருவதால் 15–09–1990ல் மனுதாரரின் தந்தை பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள விவசாய விண்ணப்பத்தை வேறு இடத்திற்கு இடமாற்றி மின்இணைப்பு வழங்க இயலாது. மேற்கண்ட தகவலை மனுதாரருக்கு தெளிவாக தலைவர், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் குழுமம், மேட்டூர் மின்பகிர்மான வட்டம், மேட்டூர் அணை அவர்கள் தெரிவித்துள்ள நிலையில் மீண்டும் மனுதாரர் மேல்முறையீடு செய்திருப்பது ஏற்புடையதாக இல்லை.

## (5) <u>மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் ஆணை:–</u>

மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தன்னுடைய ஆணையை 16–05–2011ல் மனுதாரருக்கு கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளது :–

“(செயற்பொறியாளரின்) அறிக்கையை பரிசீலித்ததிலும், ஆவணங்களை ஆராய்ந்ததிலும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய வழிகாட்டுதலின்படியும், தமிழ்நாடு மின்சார பகிர்மான தொகுப்பு விதி 27 (13)–ன்படி ஒரு கிணற்றுக்கு ஒரு நபர் பெயரில் ஒரு மின்இணைப்பு மட்டுமே வழங்க இயலும் என்பதால், தங்களது தந்தை திரு.கந்தசாமி கவுண்டர், த/பெ. கருப்பகவுண்டர் பெயரில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பம் **151/90–91**, நாள் **15–09–1990** பெயர் மாற்றம் மற்றும் இடமாற்றம் செய்து மின்இணைப்பு வழங்க இயலாது என தங்களது மனுவிற்கு முடிவு காணப்படுகிறது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது”.

**6.** <u>**மின்குறை தீர்ப்பாளரின் கேட்புரை**</u> **:–**

மேல்முறையீட்டாளருக்கும், எதிர்மனுதாரருக்கும், தங்களுடைய வாதங்களை, நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக **14–02–2012** அன்று மின்குறை தீர்ப்பாளரால் நேரடி விசாரணை நடத்தப்பட்டது. அன்று மேல்முறையீட்டாளர், கலந்து கொள்ளவில்லை. மேலும், விசாரணையை தள்ளி வைக்கும்படி கோரிக்கையும் கொடுக்கவில்லை. எனவே அவருக்கு மற்றொரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு **8.5.2012** அன்றும் ஒரு கேட்புரை நடத்தப்பட்டது. அதில் மேல்முறையீட்டாளர் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார். எதிர்மனுதாரர் சார்பில், திரு.எம்.கணேசன், உதவி செயற்பொறியாளர் (கிழக்கு), சங்ககிரி அவர்கள் கேட்புரை நடந்த இரண்டு நாட்களிலும் கலந்து கொண்டார். மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களுடைய மனு மற்றும் எதிர் மனுவில் தெரிவித்த தகவல்களையே நேரடி விசாரணையிலும் தெரிவித்தார்.

7. <u>மின்குறை தீர்ப்பாளரின் தீர்வு</u> :–

மேல்முறையீட்டாளரின் மனு, எதிர் மனுதாரரின் பதிலுரை மற்றும் மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் நேரடி விசாரணையில் தெரிவித்த தகவல்கள், சமர்ப்பித்த ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாகத் தெரிகின்றன.

(அ) சங்ககிரி வட்டம், ஒலக்கசின்னானூர் கிராமம், 178/3Fல் நிலத்துள்ள கிணற்றிற்கு பெறப்பட்ட மின்இணைப்பு எண்.166–003–68, திரு.கந்தசாமி கவுண்டருக்கு மட்டும் சொந்தமானதா ? அல்லது திருமதி.இராசாயம்மாளுக்கும் கூட்டாகச் சொந்தமானதா ?

(ஆ) மேல்முறையீட்டாளரின் தகப்பனார் திரு.கந்தசாமி கவுண்டர் 15–09–1990 அன்று பதிவு செய்த விண்ணப்பம் எந்த கிணற்றிற்கு செய்யப்பட்டது ? அது தனியாக செய்யப்பட்டதா (அல்லது) கூட்டாகச் செய்யப்பட்டதா ?

(இ) ஒருவரது பெயரில் ஒரு கிணற்றில் எத்தனை மின்இணைப்புகள் பெறலாம் ?

(ஈ) விவசாய மின்இணைப்பு பெறுவதற்காக கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தை வேறு கிணற்றுக்கு மாற்றுவதற்கு உள்ள விதிமுறைகள் என்ன ?

(உ) மேல்முறையீட்டாளரின் மனு, அந்த விதிகளின்படி மாற்றத்தக்கதா ?

8. <u>வழக்கெழு வினா "அ" விற்கான தீர்வு:–</u>

8.1. விவசாய மின்இணைப்பு எண்.166–003–68 திரு.கந்தசாமி கவுண்டருக்கு மட்டும் தான் சொந்தமானதா அல்லது திருமதி.இராசாயம்மாளுக்கும் கூட்டாக சொந்தமானதா என்பதைத் தெரிந்து கொள்ள, எதிர்மனுதாரரிடம், விண்ணப்பத்தின் நகல் கேட்கப்பட்டது.

ஆனால், விண்ணப்பத்தின் நகலை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், அந்த மின்இணைப்புக்காகப் பெறப்பட்ட சோதனைத்தாளின் நகலின்படி அந்த மின்இணைப்பு திரு.கந்தசாமி கவுண்டருக்கு மட்டுமே சொந்தம் என்று எதிர்மனுதாரரின் சார்பாக வந்திருந்த திரு.கணேசன், உதவி செயற்பொறியாளர், கிழக்கு சங்ககரி அவர்கள் வாதிட்டார்.

**8.2.** சோதனை அறிக்கை எண்.008113ல் திரு.கந்தசாமி கவுண்டரின் பெயரில் மின்இணைப்பு பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கிறது. சொந்தக்காரரின் கையொப்பம் என்ற இடத்தில் திரு.கந்தசாமி அவர்கள்தான் கையொப்பம் இட்டுள்ளார்கள். சோதனை அறிக்கை **26–03–1987** அன்று தயாரிக்கப்படபட்டுள்ளது. சோதனை அறிக்கையில் விண்ணப்பத்தின் எண்.270/78–79 என்று கொடுக்கப்பட்டுள்ளது. நிலத்தின் நில அளவை எண்.178/3 என்று கூறப்பட்டுள்ளது.

**8.3.** மேலும், விண்ணப்ப பதிவு ஏட்டின் நகலை, எதிர்மனுதாரர் தனது **03–03–2012** தேதியிட்ட கடிதத்துடன் அனுப்பியுள்ளார். அதனை ஆராய்ந்து பார்க்கும்பொழுது திரு.கந்தசாமி கவுண்டரின் விவசாய மின்இணைப்பு விண்ணப்பம் **08–08–1978** அன்று மின்வாரிய அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. மேலும் விண்ணப்பம் திரு.கந்தசாமி கவுண்டர் பெயரில் தான் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

**8.4** மேல்முறையீட்டாளர் தன்னுடைய தந்தை விவசாய மின் இணைப்பு கோரி சமர்பித்த விண்ணப்பத்தில் , அது அவருக்கு மட்டும் என்று விண்ணப்பிக்கப்பட்டிருந்தால், தன்னுடைய மனுவை விலக்கி கொள்வதாக அவர் கலந்து கொண்ட நேரடி விசாரணையின்பொழுது தெரிவித்தார். ஆனால் விண்ணபத்தை தனக்கு காட்டவேண்டும் என்றும் கூறினார் . ஆனால் அவர் சோதனைதான் மற்றும் விண்ணப்பம் பதிவு செய்யப்படும் ஏடு ஆகிய ஆவணங்களை ஏற்க மறுத்துவிட்டார்.

8.5. ஆனால், விவசாய மின்இணைப்பு விண்ணப்ப பதிவு ஏட்டில் உள்ள விண்ணப்ப பதிவு மற்றும் சோதனை அறிக்கையின்படியும் திரு.கந்தசாமி கவுண்டர் அவர்கள் தனியாக விண்ணப்பித்து விவசாய மின்இணைப்பு எண். 166–003–68ஐ பெற்றுள்ளதாக தெரியவருகிறது. எனவே அந்த மின்இணைப்பு எண் திரு.கந்தசாமி கவுண்டருக்கு மட்டும் சொந்தமானது என்று தெரிகிறது.

9. <u>வழக்கெழு வினா "ஆ"விற்கான தீர்வு:–</u>

9.1. திரு.க.கந்தசாமி கவுண்டர் அவர்களால் பதிவுச் செய்யப்பட்ட விவசாய மின்இணைப்புக்கான விண்ணப்பத்தின் நகல், எதிர் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதை ஆராய்ந்து பார்த்ததில் கீழ்க்கண்டவைகள் தெரிகின்றன :–

| | | |
|---|---|---|
| விண்ணப்பதாரரின் பெயர் | – | க. கந்தசாமி கவுண்டர் |
| விண்ணப்பித்தத் தேதி | – | 15–03–1990 |
| பதிவு எண். | – | 151/90–91 |
| கிணறு இருக்கும் நிலத்தின் அளவை எண்.(SFNO) | – | 178/3F |
| கிராமத்தின் பெயர் | – | ஒலக்க சின்னானூர்<br>சங்ககிரி தாலுகா |
| கிணற்றிற்கு அருகில் உள்ள விவசாய மின்இணைப்பு எண். | | S.C. No. 68 |

9.2. மேலும், அந்த கிணற்றின் கூட்டுப் பாத்தியதை உள்ள திருமதி.ராசாயம்மாள் அவர்கள் விண்ணப்பதாரருக்கு மின்சாரம் வழங்குவதில் எவ்வித தடையுமில்லை என்ற சம்மதத்தைத் தெரிவித்துள்ளார்கள். மேலும் கிராம அலுவலர் 178/3 என்ற நில அளவை எண்.178/3F என்றும், நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (UDR) மாற்றப்பட்டுள்ளது

என்றும் 178/3 என்ற எண்ணும் மற்றும் 178/3F என்ற எண்ணும் ஒன்றுதான் என்றும் சான்றளித்துள்ளார்.

9.3. எனவே மேற்கூறிய விண்ணப்பம், ஏற்கனவே மின்இணைப்பு உள்ள எண். 166–033–68 இடத்திற்குதான் என்று அறிய முடிகிறது. மேலும் இந்த விண்ணப்பம், திரு.க.கந்தசாமி கவுண்டர் அவர்களால் தனியாக மின்இணைப்பு வேண்டிச் செய்யப்பட்டது என்றும் அறிய முடிகிறது.

10. <u>**வழக்கெழு வினா "இ"விற்கானத் தீர்வு :–**</u>

10.1. எதிர்மனுதாரர் மின்பகிர்மான தொகுப்பு விதி 29 (2) மற்றும் 27 (13) ஐ சுட்டிக் காட்டி ஒரு கிணற்றுக்கு ஒரு இணைப்பு மட்டுமே வழங்க முடியும் என்று கூறியுள்ளார். அந்த விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

"29 (2) பண்ணை வீட்டில் வீட்டுப் பயன்பாட்டுக்காகத் தண்ணீர் ஏற்றவும், வானொலி மற்றும் பிற பயன்பாட்டுக் கருவிகளுக்குப் பயன்படுத்தவும் தனி மின்னிணைப்பு தேவையென, ஒரு வேளாண் மின்னிணைப்போடு கேட்டால் ஒரே புல அளவை எண்ணில் / (survey filed number) துணைப்பிரிவு புல எண்ணில் ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புக்கள் தரப்படும்.

27 (13) ஒரே கதவிலக்கத்திற்கு அல்லது துணை கதவிலக்கத்திற்கு அல்லது தனியொருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மின்இணைப்புகள் தரமுடியாது".

10.2. மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு விதிகளில் 29 (2) வது விதி விவசாய மின்இணைப்புக்கான விதியாகும். அதன்படி ஒரு புல எண்ணில் (நில அளவை எண்.) விவசாயத்திற்கான மின்இணைப்பு ஒன்றுதான் பெற முடியும் என்று தெரிகிறது.

10.3. மேலும் விவசாய மின்இணைப்புகளை பொறுத்தவரை 28 (2)ன்படி தேசிய மின்சார கொள்கை வழிகாட்டுதல்களையும், மாநில அரசு பொதுமக்கள் நலன் கருதி வெளியாகும் கொள்கை நெறிகாட்டுதலையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

10.4. மேலும் தலைமைப் பொறியாளர் / திட்டம் தன்னுடைய 22–07–2011 தேதியிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

10.5. ஒரு கிணற்றில் ஒரு நபருக்கு ஒன்றிற்கு மேற்பட்ட மின்இணைப்பு வழங்குவது நடைபெறாமல் இருப்பதற்காக கீழ்க்கண்ட உறுதிமொழி (Undertaking) விண்ணப்பதாரரிடம் இருந்து பெறவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ) தற்பொழுது விண்ணப்பிக்கப்படும் கிணற்றிற்கோ / ஆழ்துளை கிணற்றிற்கோ, தன்னுடைய பெயரில் நிலுவையில் விண்ணப்பம் அல்லது மின்இணைப்பு இல்லை என்றும்.

(ஆ) அவ்வாறு தெரியவரும்பட்சத்தில், இந்த விண்ணப்பம் நீக்கம் செய்யப்படும் என்றும், விண்ணப்பத்தினை வேறு கிணற்றிற்கு மாற்ற முடியாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட காரணங்களினால், ஒரு கிணற்றிற்கு ஒருவரின் பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட மின்இணைப்புப் பெற முடியாது என்று தெரிகிறது.

**11. <u>வழக்கெழு வினா “ஈ”விற்கான தீர்வு:–</u>**

விவசாய மின்இணைப்பை வேறு கிணற்றிற்கு மாற்றம் செய்வது சம்பந்தமாக மின்சார வழங்கல் விதிதொகுப்பு மற்றும் மின்சார பகிர்மான விதிதொகுப்பு இனங்களில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, உரிமைதாரர் ஏற்படுத்திய விதிகளைத்தான் பின்பற்ற வேண்டும். விவசாய மின்இணைப்பை மாற்றுவதற்கான விதிகள்தான், விவசாய

மின்இணைப்பு விண்ணப்பத்தில் உள்ள கிணற்றை மாற்றுவதற்கும் பொருந்தும் என்று மின்சார வாரியத் தலைவர் 05–12–1983ல் வெளியிடப்பட்டுள்ள குறிப்பாணையில் தெரிவித்துள்ளார். மேலும் உறுப்பினர் / பகிர்மானம் அவர்கள் 28–12–1991ல் அனைத்துத் தலைமைப் பொறியாளர் பகிர்மானத்திற்கும் அனுப்பிய சுற்றறிக்கையிலும் மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார். எனவே, விவசாய மின்இணைப்பை மாற்றுவதற்கான விதிமுறைகள் தான் விவசாய மின்இணைப்பு விண்ணப்பத்தை வேறு கிணற்றிற்கு மாற்றவும், கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிகள் ஆகும் என்று தெரிய வருகிறது. விவசாய மின்இணைப்பை மாற்றும் விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

**(A) <u>Memo No.SE/RE&LL/LO/AE4/GW/114/dt. 17-03-1978</u>:-**

It has been brought to notice that many new applicants for power supply try to take advantage of the relaxations given in the two memos quoted under ref.1 and 2 for shifting of services and attempt to get supply circumventing the priority by initially stating that they are co-owners of wells and later on applying for shifting their service to a new location on the plea of "Non-availability of water".

The instructions issued in memos cited 1 and 2 are therefore partially modified as under :

1. The words "non-availability of water" in memo cited (1) are "hereby" deleted.
2. Shifting of agricultural service to a new location may be permitted for the same person due to dryness of well provided the new location is in the same village. The work of shifting should be done as deposit contribution work.

3. Shifting should not be permitted to a new location outside the village. Such cases should be treated as new applications for power supply and dealt with as per rules according to priority, technical feasibility and viability of each work.

4. Shifting of pump sets of enlisting co-owners of wells can also be done as per (2) above only.

5. Extension of supply to new applicants as co-owners of wells may be effected provided their ownership of well is certified by an officer of the Revenue Department not below the rank of a Tahsildar and (2) it is accompanied by a certificate from the Project Officer (ARDC) to the effect that there is adequate water for both the pump sets in the same well.

**(B) Chairman Memo No.SE/RE/DE/SS/A1/C 473-1/83, dated 05-12-1983.**

1. Shifting of agricultural services from the existing well to another well can be permitted in respect of the following cases subject to technical feasibility:-

(i) Shifting from one well to another belonging to the same consumer within the same distribution group of transformers irrespective of the village and

(ii) Shifting from one well to another belonging to the same consumer within the same village even if it involves a change from one distribution group of transformers to another.

2. The above work will be done as a deposit contribution work.

3. This concession will be applicable even in respect of pending applications i.e. where the service has still not been sanctioned but the applicant desires to change the location of the service to another well owned by him.

4. Particular care should be taken to ensure that this concession is not abused for trafficking in agricultural service connections. The Assistant Divisional Engineer concerned should personally enquire into the case and satisfy himself that the new well and the lands to be irrigated by it belong to the consumer and the request of the consumer is for bonafide reasons. He should record his inspection note in this regard on the relevant file.

**(C ) Memo No.SE/RE&I/(D)/DE/SS/A1/C473-3/84, (Technical Branch), dated 10-07-1984**

********

Requests for extension of supply to a well owned by the applicant in a different location in lieu of the one for which application was presented may also be considered even if estimate for the work has been sanctioned subject to the condition that the works should not have been taken up as on the date of request of the applicant.

*********

**(D) Chairman's Circular Memo No.SE/IEMC/EE3/AEE2/D.408/90 (Technical Branch), dated 30-07-1990**

*********

Shifting of agricultural service connection from the existing well to another well in another village belonging to the same consumer may be permitted in the case of the proposed well, being located within the jurisdiction of the same Section even if it is not in the same distribution group transformers. However,

such cases shall be permitted by Superintending Engineer of the Circle concerned with on receipt of personal site inspection reports by the Assistant Executive Engineer on the genuineness of the case. Each case shall be carefully examined and orders passed by the Superintending Engineer based on the norms of each case to ensure against abuse.

**(E ) Circular Memo No. SE/IEMC/EEs/AEE2/AE/F III/A-13(Tech Branch), dated 06-12-1997.**

In modification to the orders already issued in the reference cited, the shifting of agricultural service connection from the existing well to the another well belonging to the same consumer may be permitted in the case of the proposed well being located within the jurisdiction of the same division with other conditions remain the same. However, such case shall be permitted by the Superintending Engineer of the circle concerned with on receipt of personal site inspection reports by the Executive Engineer / Operation & Maintenance concerned on the genuineness of the case. Each case shall be carefully examined and order passed by the Superintending Engineer based on the merits of each cases.

*************

**(F) Memorandum No.SE/IEMC/EE3/AEE2/AE/F.S. 23/D.382/89,(Techl.Br.) dated 02-07-1999.**

*************

(i) If any consumer under normal priority requests for change of well from the original location to a new location, then no increase in the load will be permitted, under normal priority.

(ii) If the applicant, under normal priority requests for change of well from the original location to a new location with the increase in load then, he may be asked to avail supply under RSFS in the application stage itself.

(iii) If the consumer does not agree for the above, shifting alone may be permitted for the original load, if the required conditions for shifting are satisfied.

**(G) Memo No.SE/RE&1(D)/EE/RE/A1/F.Doc/D.2841/04, (Technical Branch), dated 10-12-2004.**

Of late, clarifications are being requested by the field SEs / CEs in shifting of agriculture service connection effected under SFS category. Shifting of agricultural service to another well belonging to the same party is to be considered only when the existing well has gone dry.

********

**(H) Letter No.SE/RE&I(D)/EE/RE/A1F.Doc/D.655/2008 (Technical Branch), dated 05-05-2008.**

In modification to the orders already issued in the reference cited, the shifting of agricultural service connection from the existing well to the another well belonging to the same consumer from one division to another division within the Circle may be permitted by the Superintending Engineer of the Circle concerned.

(i) with on receipt of personal site inspection reports by EE / O & M concerned on the genuineness of the case and

(ii) with the condition that the date of registration of application of the service for which shifting is requested should be cleared in the Division for which shifting is proposed.

The other conditions applicable for shifting remains the same.

The above instructions also applicable for pending applications, with the above conditions and the service may be effected under the category for which supply is requested.

**11.1** மேற்கண்ட சுற்றறிக்கை, மற்றும் குறிப்பாணைகளின்படி கீழ்க்கண்ட விதிகளின் பேரில்தான் விவசாய மின்இணைப்பு (அல்லது) விவசாய இணைப்பு விண்ணப்பத்தின் மனுவை வேறு கிணற்றிற்கு மாற்ற முடியும் என்று தெரிகிறது.

(i) கிணற்றில் தண்ணீர் இல்லை என்றால் ஒருவரின் விவசாய மின்இணைப்பு அவருக்குச் சொந்தமான வேறு இடத்திற்கு மாற்றப்படலாம்.

(ii) இரண்டு கிணறுகளும் ஒரே மின்பகிர்மானத்திலுள்ள மின்மாற்றிகளில் இருக்கவேண்டும். அவ்வாறு இருக்கும்பட்சத்தில் அவை வேறு கிராமங்களில் இருக்கலாம்.

(iii) இரண்டு கிணறுகளும் ஒரே கிராமத்தில் இருந்தால் மின்பகிர்மானம் வேறாக இருந்தாலும், மாற்றப்படலாம்.

(iv) இந்தச் சலுகையை (concession) தவறாக பயன்படுத்தப்படக்கூடாது என்பதற்காக அந்த பகுதி உதவி கோட்ட பொறியாளரால் விசாரிக்கப்பட்டு புதிய கிணறும், நீர் பயன்படுத்தப்படும் நிலங்களும், நுகர்வோருக்கே சொந்தம் என்பதையும், நுகர்வோரின் கோரிக்கை உண்மையான காரணங்களுக்காகத்தான் (bonafide reasons) என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும் உதவி கோட்ட பொறியாளரின் அறிக்கை அந்தக் கோப்பில் இடம் பெற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

(v) மேலும் அந்த வேலைக்கு ஆகும் செலவை, நுகர்வோரிடம் வசூலிக்க வேண்டும். மதிப்பீடு DCWல் செய்யப்படவேண்டும்.

(vi) (அ) சாதரண வரிசையில் இணைப்பு பெற்ற நுகர்வோர், கிணறு மாற்ற விரும்பினால், மின்பளுவை (load) அதிகரிப்பதற்கு அனுமதியில்லை.

(ஆ) மின்பளுவை அதிகரிக்க வேண்டும் என்றால், விண்ணப்பதாரர், மின்இணைப்பை SFS முறையில் பெற வேண்டும்.

(இ) மேற்கண்ட முறையில் (SFS–ல்) மின்இணைப்பை பெற விரும்பாவிடில், விண்ணப்பித்த மின்பளுவுடன் கிணறு மாற்றப்படலாம், மற்ற மாற்றத்திற்கான விதிகள் நிறைவு செய்யப்படவேண்டும்.

(vii) SFS முறையில் பெறப்பட்ட மின்இணைப்புகளும், விவசாய மின்இணைப்பை மாற்றுவதற்கான விதிமுறைகளின்படி இருந்தால் மாற்றிக் கொள்ளலாம்.

(viii) ஒரே பிரிவு அலுவலகத்தின் எல்லைக்குட்பட்டு வரும் ஒரு கிராமத்திலுள்ள கிணற்றிலிருந்து மறு கிராமத்திலுள்ள கிணற்றிற்கு அவை வெவ்வேறு மின்பகிர்மான மின்மாற்றிகளில் இருந்தாலும் மாற்றம் செய்யலாம். ஆனால் அந்த விண்ணபத்தின் நம்பகத் தன்மையைபற்றி உதவி செயற்பொறியாளரின் ஆய்வறிக்கையின் பேரில் மேற்பார்வை பொறியாளரால் அனுமதி அளிக்கப்படவேண்டும்.

(ix) ஒரு கோட்டத்திற்குள் இருக்கும் ஒரு கிணற்றிலிருந்து மற்றொரு கிணற்றிற்கு மாற்றம் கோரும் விண்ணப்பத்தின் நம்பகத் தன்மையை, அந்த கோட்டத்தின் செயற்பொறியாளர் ஆராய்ந்து அளிக்கும் அறிக்கையின் பேரில் மேற்பார்வை பொறியாளரால் அனுமதி அளிக்கப்படலாம்.

(x) ஒரு கோட்டத்திலுள்ள விவசாய மின்இணைப்பு வேறுகோட்டத்திலுள்ள அந்த மின்நுகர்வோருக்குச் சொந்தமான கிணற்றிற்கு மாற்றிக் கொள்ள மேற்பார்வை பொறியாளர் அனுமதிப்பதற்கு கீழ்கண்ட விதிகள் விதிக்கப்பட்டுள்ளன.

(அ) இயக்கம் மற்றும் பராமரிப்புச் செயற்பொறியாளர் அவர்கள் அந்த இடத்தை ஆராய்ந்து, அந்த விண்ணப்பத்தின் நம்பகத் தன்மையைப் பற்றிச் (genuineness) சான்றளித்திருக்க வேண்டும்.

(ஆ) எந்த விண்ணப்பத்திற்கு கிணறு மாற்றம் கேட்கப்படுகிறதோ அந்த விண்ணப்பத்தின் பதிவு தேதி வரை உள்ள விண்ணப்பங்கள் மாற்றம் கோரப்படுகிற கோட்டத்தில் மின்இணைப்பு பெற்றிருக்க வேண்டும்.

12. <u>வழக்கெழுவினா "உ"விற்கான தீர்வு</u> :–

12.1. விவசாய மின்இணைப்பு அரசின் உத்தரவுகளைப் பொறுத்து வழங்கலாம் என்றுள்ளது. மேலும் மின்இணைப்புகளை மாற்றும்பொழுது நுகர்வோரிடம் வசூலிக்கப்பட வேண்டியச் செலவுத் தொகையை எவ்வாறு கணக்கிடுவது என்பதுதான் மின் பகிர்மான விதித்தொகுப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால் விவசாய மின்இணைப்பை ஒரு கிணற்றிலிருந்து வேறு கிணற்றிற்கு மாற்றுவது சம்பந்தமாக விதிகள் எதுவும் கூறப்படவில்லை. எனவே உரிமைதாரர் ஏற்படுத்திய விதிகளைத்தான் கடைப்பிடிக்க வேண்டியது உள்ளது.

12.2. 11வது பத்தியில் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி, விவசாய மின்இணைப்பிற்கான விண்ணப்பம் அளித்திருப்பவர் மின்இணைப்பு பெறுவதற்கு முன்பு, அவர் விரும்பும் பட்சத்தில் அவருக்குச் சொந்தமான வேறு கிணற்றிற்கு / ஆழ்துளை கிணற்றிற்கு அந்த விண்ணப்பத்தை, தன்னுடைய வரிசை மாறாமல் மாற்றுவதற்கு அனுமதி உள்ளது. ஆனால் அது சில விதிகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

12.3. ஆனால் திரு.க.கணேசன் மேல்முறையீட்டாளரின் தகப்பனாரின் பெயரில் உள்ள மனுவை அவரின் பெயரில் உள்ள வேறு சர்வே நம்பரில் உள்ள கிணற்றிற்கு மாற்றுவது கீழ்க்கண்ட இரண்டு விதிகளின்படி மாற்ற முடியாது என்று தெரிகிறது.

(i) மின் பகிர்மான விதித்தொகுப்பு 29(2)ன்படி ஒரு சர்வே நம்பரில் ஒரு விவசாய மின் இணைப்புதான் வழங்க முடியும். ஏற்கெனவே சர்வே எண்.138/3Fல் ஒரு மின்இணைப்பு உள்ளதால், அதே சர்வே நம்பரில் அதே நபர் அந்த சர்வே எண்ணில் உள்ள அதே கிணற்றிற்கு மேலும் ஒரு மின்இணைப்புக் கேட்டு விண்ணப்பித்தால், அது முறையான விண்ணப்பம் என்று எடுத்து கொள்ள முடியாது. எனவே, மேற்கண்ட விதிகளுக்கு அந்த விண்ணப்பத்தை வேறு கிணற்றிற்கு மாற்ற முடியாது என்று தீர்மானிக்கப்படுகிறது.

(ii) விவசாய மின்இணைப்பை ஒரு கிணற்றிலிருந்து மற்றொரு கிணற்றிற்கு மாற்ற வேண்டும் என்றால் முதலில் மனு செய்துள்ள கிணற்றில் தண்ணீர் இல்லாமல், இருக்க வேண்டும். ஆனால் மேல்முறையீட்டாளர் அதுபோன்ற காரணங்களையே சான்றுகளையோ தரவில்லை. அந்த காரணங்கள் ஏதேனும் இருந்தால், இப்பொழுது அவருக்குச் சொந்தமான கிணற்றில் இருக்கும் மின்இணைப்பு எண்.68ஐ உபயோகிக்க முடியாது.

13. <u>முடிவுரை</u> :–

மேலே பத்தி 8லிருந்து 12 வரை கொடுக்கப்பட்டுள்ள வழக்கெழு வினாக்களுக்கான தீர்வின்படி மேட்டூர் மின்பகிர்மான வட்ட மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தின் தீர்ப்பினை உறுதி செய்யப்படுகிறது என்ற தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.239/2001 இறுதி முடிவு செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(ஆ.தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

<u>நகல் பெறுநர்</u>

1. திரு. க. கணேசன்
த/பெ. திரு.கந்தசாமி
பாப்பங்காடு
வைகுந்தம் (அஞ்சல்)
சங்ககிரி வட்டம்
சேலம் மாவட்டம் – 637 103.

2. தலைவர் (மேற்பார்வைப் பொறியாளர்)
மேட்டூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
மேட்டூர் அணை – 1

3. செயற்பொறியாளர் / இ & ப,
மேட்டூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
வி.என். பாளையம், சங்ககிரி.

4. தலைவர்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி வளாகம்
அண்ணாசாலை, சென்னை – 2.

5. செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19எ, ருக்மணி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.

6. உதவி இயக்குநர் (கணிணி)
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19a, ருக்மணி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.